# சங்கத்தமிழரின் மானம் காத்த வீரம்

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
Professor Dr.M.Rajantheran[1]
**க.சில்லாழி**[2]
K.Silllalee[2]

**Abstract**

From time immemorial, the culture of Tamils has been at its summit. The Sangam Literature brings out the life of ancient Tamils, their Culture, Civilization and its development in crystal clear terms. Delving deep into the life of these Tamils it is known that their life is divided into two aspects called the internal and external lives. The internal life includes love and chastity; whereas the external life talks about valour which was given prime preference. Purananooru records songs of valour exhibited in wars. In these wars, it is learnt that Tamils fought to protect their honour. In the life of ancient Tamils, it is seen that sence of honour and valour were inseparable which was recorded in Purananooru.

*Key Words : Valour, Honour, Ancient Tamils, Sangam Literature, Purananooru, War*

## முன்னுரை

தமிழரின் நாகரிகம் மிகப் பழங்காலம் தொட்டே சிறந்த நிலையில் இருந்துவந்துள்ளது. பழந்தமிழரின் வாழ்க்கையையும், அவர்களின் பண்பாட்டுக் கூறுகளையும், நாகரிக வளர்ச்சியையும் சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. சங்க இலக்கியத்தின் அடிப்படையில் காணும்போது, பழந்தமிழரின் வாழ்க்கை அகம், புறம் என இரண்டு நிலைகளில் பகுக்கப்பட்டுள்ளமை அறியப்படுகின்றது. அகம் எனப்படுவது காதல், கற்பு நிலை வாழ்க்கையைச் சித்தரிக்கின்றன. புறப்பாடல்கள் பழந்தமிழரின் வீரம், சமுதாயக் கட்டமைப்பு, அரசியல், தொழில்துறை போன்ற செய்திகளைக் காட்டுகின்றன. புறப்பாடல்களில் தமிழர்களின் வீரத்திற்கே முதலிடம் அளிக்கப்பட்டுள்ளதை புறநானூறு முதலான பாடல்கள் நன்கு விளக்குகின்றன. இந்த வீரத்தை முன்னிறுத்தி எழுந்த போர்களைப் பற்றியும் பல குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும், புறப்பாடல்களில் கூறப்பட்டுள்ள போர்களைக் காணும்போது, இவற்றில் பல போர்கள் தமிழரின் மானம் காக்கும் வீரத்தினால் அமைந்திருந்ததையும் அறியமுடிகின்றது. அதோடு பழந்தமிழரின் வாழ்க்கையில் மான உணர்வும் வீரமும் ஒன்றோடு ஒன்று கலந்திருத்தலையும் புறப்பாடல்களின் வழி காண முடிகின்றது.

## சங்க இலக்கியம்

இலக்கியம் என்பது ஒரு நாட்டின், இனத்தின் உண்மையான வரலாறு என்று அறிஞர் பலர் கருதுவர். இதற்குக் காரணம், வாழ்க்கையின் ஆழ்ந்த அனுபவங்களை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் இலக்கியத்திற்கு உண்டு என்பதுதான். எனவே, இலக்கியமானது அடிப்படையில் எழுத்து வடிவில் வாழ்க்கையை, அதன் விழுமங்களை ஏந்திச் செல்லக்கூடிய ஊடகமாகக் கருதப்படுவது சாலப் பொருந்தும். இதனால்தான், மொழியானது, ஒரு தொடர்புக் கருவியாக மட்டுமல்லாது, அது மக்களின் எண்ணங்களையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கக்கூடிய கண்ணாடி என்று கூட அறிஞர் பெருமக்கள் கூறுவர்.

மொழியின் உச்சமாகக் கவிதையைக் குறிப்பிடுவர். கவிதை என்பது ஒரு சமுதாயத்தின்

---

[1]The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@gmail.com

[2]The author is a PhD candidate at The Department of Indian Studies, University of Malaya. silllalee@yahoo.com

வாழ்க்கை நிலைப்பாட்டை மதிப்பீடு செய்ய அடிப்படையாக அமைவதாகவும் உள்ளது (இராசேந்திரன் - சில்லாழி, 2014, 365). அக்கவிதையானது அந்த இனத்திற்கே உரிய கலப்பற்ற தூய இலக்கிய செந்நெறிகளை உடையதாக இருக்குமானால், அச்சமுதாயத்தின் உண்மையான வாழ்க்கை நிலைப்பாடு, கருத்தாக்கம் முதலியவை மேலும் தெளிவுற வெளிப்பட அவை உதவும். அவ்வகையில் தமிழ்மொழியைப் பொருத்த வரையில் குறைந்தபட்சம் 2500 ஆண்டுகளுக்கு முன்பே இம்மொழி உச்சத்தை எட்டிவிட்டது என்பது தெளிவு (வரதராசன், 1992, 27).

கவிதை வடிவத்தில் மட்டுமின்றி, பாடுபொருளிலும் மிகப்பெரிய உச்சத்தைத் தமிழ் இலக்கியம் தொட்டுவிட்டதை மறுப்பார் இல்லை. இதற்கு உதாரணமாகத் தமிழில் நமக்கு முழுமையாகக் கிடைத்திருக்கும் தொல்காப்பியத்தின் பொருள் இலக்கணத்தைக் குறிப்பிடலாம். மேலும், தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றைப் பழைய இலக்கியம் என்று கூறுவது மரபாகும். சங்க இலக்கியத்தின் பொருள் பாகுபாடு அகம், புறம் என இரு பெரும் பிரிவாக பகுக்கப்பட்டுள்ளது (தமிழண்ணல், 1992, 108). இப்பகுப்பானது கூட உலக இலக்கியங்கள் வேறு எதிலும் காணக்கிடைக்காத ஓர் அரிய செய்தியாகும். பொதுவாகக் காதல் பற்றிய அன்புணர்ச்சியின் உள்ளக் கிடக்கையை அகம் என்றும் அதற்குப் புறமாக விளங்குகின்ற வீரம், கொடை, புகழ், உள்ளது கூறல், வரலாற்றுச் செய்திகள் முதலிய பிறவற்றைப் புறம் என்றும் பகுத்தனர் (ஞானசம்பந்தன், 1955, 2-3).

இதில் புறப்பொருள் மக்களின் பல்வேறு வாழ்க்கைக் கூறுகளைப் பற்றிப் பாடுவதாக அமையப் பெற்ற போதிலும், இதில் மானம் காக்கும் வீர உணர்வுக்குத் தனித்துவம் இருப்பதை மிகத் தெளிவாகக் காண முடிகின்றது. அதிலும் இக்கருத்தானது புறநானூற்றுப் பாடல்களில் மிகவும் சிறப்பாக வெளிப்படுவதைக் காணலாம் (பாலசுப்பிரமணியன், 1994, 52-53). இச்சிந்தனையின் அடிப்படையில் தமிழரின் மானம் காக்கும் வீரம் எவ்வாறு புறநானூற்றுப் பாடல்களில் அமையப் பெற்றுள்ளன என்பதை ஆய்வு செய்வதாகவே இந்த ஆய்வுக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

## தமிழர் வீரம்

உலக இலக்கியங்களுள் அகம், புறம் என இலக்கியப் பொருளை வகுத்த பெருமை தமிழருக்கே உரியது. இதிலிருந்து அக வாழ்வில் காதலுக்கும் புற வாழ்வில் வீரத்திற்கும் முதன்மையளித்த தமிழரின் மாண்பு சங்க இலக்கியங்களால் பெறப்படும் (தமிழண்ணல், 1992, 108). புற இலக்கியங்களை எடுத்துக் கொண்டால், அதன் ஏழு திணைகளுள் பாடாண், காஞ்சி ஆகியவற்றைத் தவிர்த்து, பிற ஐந்து திணைகளாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகியன போர், துவக்கம், வளர்ச்சி, முடிவு போன்றவற்றினை அடியொற்றி அமைவன ஆகும். பாடாண், காஞ்சியிலும் கூடப் போர் தொடர்பான செய்திகளும், குறிப்புகளும் மிகுதியாகவே உள்ளன (வரதராசன், 1992, 33).

புறம் என்பது ஒரு ஒப்பற்ற வீரத்தைப் பற்றிப் பேசுவது. தனக்கு ஈடாக இருக்கின்ற ஒருவரோடு அல்லது மற்ற போர் வீரர்களோடு பொருதுவதைக் குறித்தது. அது எளிய மக்களையும், இளைத்தவர்களையும் வலிய மக்கள் வீணாக இன்னலுக்கு ஆளாக்கி இன்புற்று வாழ்வதன்று. மற்றவர்களைவிடத் தான்தான் பெரியவன் எனும் மமதையில் செயல்படும் போக்கன்று. இது நாடு காக்கும் வீரம். நாட்டுக்காக உயிரையும் தியாகம் செய்யும் உயரிய பண்பு குறித்த வீரம். இதுவே இவர்களின் ஒப்பற்ற வீரம் தோய்ந்த வாழ்க்கைக்கு இலக்கணம் (சாமி சிதம்பரனார், 1986, 222).

ஒருவன் தான்கொண்ட கொள்கையில் உறுதியுடன் நின்று வெற்றி கொள்ளுதல், எடுத்துக்கொண்ட காரியத்தில் எத்துணை தடைகள் எதிர்ப்பட்டாலும் அத்தனையையும் தாண்டி அஞ்சாமல் அரிய முயற்சியால் அதனைச் செய்து முடித்தல், தன்மானத்திற்கு

இழுக்கு வரும் போது அதனை எதிர்த்துப் போராடுதல், இழுக்கு வராமல் செயல் வீரர்களாகத் திகழ்தல், தம்மை இழித்துப் பேசுவோர், தாழ்த்திப் பேசுவோர், நாணித் தலைகுனியும்படி அவர் தம் செருக்கைச் சிதைத்தல் ஆகியவையும் வீரத்தின் அடையாளமாகக் கூறலாம்.

ஓர் ஆண் மகனின் கடமைகளைச் சொல்லுவதாக அமைந்துள்ள பொன்முடியாரின் புறநானூற்றுப் பாடலில் (312) அவனது தலையாய கடமை யாதெனக் குறிப்பிடுகையில் ஒளி மிகுந்த வாளைக் கையில் ஏந்தி போரிலே பகைவர்களை எதிர்த்து வெற்றி கொண்டு பகை மன்னர்களின் யானைகளையும் கொன்று வருவதே ஆகும் என்கிறார். இப்படிப்பட்ட வீரனுக்குத் தான் தாயாக இருக்க வேண்டும் எனும் வீரத்தாயின் வேட்கையையும் உறுதியையும் விளக்குவதாக இப்பாடலில் வரும், 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' எனும் முதல் வரி அமைவதைக் காணமுடிகின்றது. இதுவே சங்கத் தமிழ்த் தாய்மார்களின் வீரம் மிக்க மன உறுதியைப் பறைசாற்றப் போதுமான குறிப்பாகும்.

மேலும், அவனைச் சான்றோனாக்குவது தந்தைக்குக் கடமை. இதுவல்லாது, அந்த ஆண்மகனுக்கு உரிய போர்ப் பயிற்சிகளை அளித்து அவனை ஒப்பற்ற வீரனாக உயர்த்துவது அரசனின் கடமை என்றும், போர்க்கருவிகள் தயாரித்துத் தருதல் கொல்லனின் கடமை என்பதாகவும் அமையும் இப்பாடல், சங்க கால வாழ்வியலின் முக்கியமான படப்பிடிப்பாகக் கருதப்படுகின்றது. ஆண்மகனுக்கு இலக்கணம் என்பதே அறப்போரில் வெற்றி கொள்வதே என்றும், அது அக்காலகட்டத்தில் ஒரு நாட்டின் நிலைப்பாட்டில் முக்கியக் கூறாக அமைந்ததாலும் ஒரு நாட்டில் இருக்கின்ற பல பிரிவு மக்களும் போரை நோக்கியே செயல்படுகின்ற நிலையைப் பார்க்க இயலுகின்றது. எனவே எந்நேரமும் பகையரசரிடமிருந்து தம் நாட்டைக் காக்கும் எண்ணம் அரசரை மட்டும் சார்ந்தில்லாமல் சாதாரணக் குடிமக்களிடமும் அந்தப் பொறுப்புணர்ச்சியும் வீரமும் நிறைந்திருந்ததைக் காணமுடிகின்றது. இந்த மன வன்மையானது அவர்களது வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமாகவே இருப்பதைப் புறப்பாடல் 278-இன் வழி அறியமுடிகின்றது.

காக்கைப் பாடினியார், நச்செள்ளையார் பாடிய இப்பாடலில் வயது முதிர்ந்த தாயொருத்தித் தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடினான் என்பதாகக் கேள்வியுற்றுப் பெரும் வேதனைக்குள்ளானாள். அவ்வாறு தன் மகன் புறமுதுகிட்டு ஓடும் கோழையாய் இருப்பானாயின் அவனுக்குப் பாலூட்டிய மார்புகளை வெட்டி எறிந்துவிடுவதாக அவள் சூளுரைத்துக் கையில் வீரவாளுடன் பிணங்கள் நிறைந்து கிடக்கும் போர்க்களத்திற்குள் நுழைந்தாள். இறுதியில் தன் மகன் உடலைக் கண்டு அவன் மார்பிலே புண் பெற்று இறந்து பட்டான் என்பதைக் கண்டுகொண்டாள். அத்தருணத்திலே ஈன்ற பொழுதில் பெற்ற உவகையைக் காட்டிலும் பன்மடங்கு மகிழ்ச்சியுற்றாள் என்பதாகச் செய்தி பதிவாகியுள்ளது.

தன் மகன் வீரமரணம் எய்தினான் என்பதுவே இந்த வீரத்தாயின் மட்டில்லா மகிழ்ச்சிக்குக் காரணமாகியது. இதனால் அவள் பெரும் பாக்கியம் செய்தவளாக, வீரத்தாயாக உயரிய இடத்தைச் சமுதாயத்தில் நிரந்தரமாகப் பெற்றுவிடுகிறாள். மேலும், தாயானவள், வீரமகனை ஈன்றெடுத்ததால், அவனைச் சுமந்த வயிற்றைப் புலி இருந்த குகையாக உவமை கூறி உவகை கொள்கிறாள். அதோடு நில்லாமல் வாயில் புறத்தே நிற்கும் இவளிடத்தில் உன் மகன் எங்கே இருக்கிறான் என்று கேட்போரிடத்தில் அவன் வீர மைந்தன் ஆகையால், அவனைக் காணவேண்டும் என்றால், போர்க்களத்தில்தான் காணவேண்டும் எனப் பெருமிதத்துடன் அந்தத் தாய் கூறுவதாக காவற்பெண்டு எனும் புலவர் புறநானூற்றின் 86-ஆவது பாடலில் குறிப்பிடுகின்றார்.

பழந்தமிழரின் வீரப் பண்பினைக் குறிப்பிடும் ஒக்கூர் மாசாத்தியர் எனும் புலவனார் (புறம் 279) சொல்லும் செய்தியோ இதனினும் மேம்பட்டது. வீரப் பெண் ஒருத்தியின் தந்தை, பகை அரசருடன் நடைபெற்ற போர் ஒன்றில் யானைகளைக் கொன்று, அதன்

பின்னர் அப்போர்க்களத்திலேயே வீரமரணம் அடைகிறான். நேற்று நடந்த போரிலோ அவளுடைய கணவன் மன்னனின் ஆநிரைகளைக் காத்து நின்று போர் புரிந்து மாண்டு போகிறான். இன்று மீண்டும் போர் முரசு கொட்டுகிறது. தன் தந்தையையும், கணவனையும் நாட்டுக்காகக் கொடுத்துவிட்டுத் தன் மகன் ஒருவனையே வாழ்வாதாரமாகக் கொண்ட அந்த வீரத் தாய் இதுவரை அடைந்த இழப்புகளை எண்ணி மனம் கலங்காது, இன்று போர்க்களத்திற்கு அனுப்புவதற்குத் தன் மகன் இருக்கின்றான் என்று அகம் மகிழ்கிறாள். இவள் மகனோ இளம் பாலகன். ஆனாலும் இவனுக்கு வெள்ளாடை உடுத்திக் கையிலே பகைவரை வெற்றிகொள்ளும் வீர வேலையும் கொடுத்துப் பகைவரை வென்று வருமாறு போர்க்களத்திற்கு அனுப்புகிறாள்.

பொதுவில் சங்கத் தமிழர் ஆண் பிள்ளைகள் பெறுவதையே விரும்பியதாகவும், ஆண்மகனைப் பெற்ற தாய்மார்களையே அப்போதைய சமுதாயம் போற்றியதாகவும் கருத்துரைப்பார் உளர். இறப்பிற்குப்பின் ஒருவர் அவ்வுலகில் இடம்பெறவேண்டுமாயின், அவர்க்கு ஆண்மகன் இறுதிக் கடன்களைச் செய்தல் வேண்டும் எனும் நம்பிக்கையும் பழந்தமிழரிடம் இருந்ததாகவும் கூறுவார் உண்டு. இவ்வாறான கருத்துகள் பிற்கால சமய வளர்ச்சியின் தாக்கத்தால் உந்தப்பட்டவையாகவோ அல்லது இடைச்செருகல்களாகப் பாடல்களில் சேர்க்கப்பட்டவையாகக் கூட இருக்கலாம் என்பதற்கு மேற்சொன்ன ஒக்கூர் மாசாத்தியரின் பாடல் மிகச்சிறந்த சான்றாக அமைகின்றது. தன் தந்தையையும், கணவனையும் போரில் இழந்துவிட்ட ஒரு பெண் தனக்கென மிஞ்சி நிற்கும் தன் இளம் பாலகனைப் போருக்கு அனுப்பினாள் என்று சொன்னால், அவ்வுலக இடத்தை அடையும் வேட்கையைப் பற்றிய எண்ணம் சிறு துளி கூட அந்தத் தாயிடம் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படி இருந்திருந்தால் தன் மகனாகிய பாலகனைத் தன் வீட்டிலேயே தக்க வைத்துக் கொண்டிருந்திருக்கலாம்.

சிறு பாலகனைப் போருக்கு அனுப்ப மறுத்தாள் என்று யாரும் அவளைக் குற்றம் கூறக்கூட இடமில்லை. ஆனால், எதிரிகளிடம் நாட்டை இழந்து கோழைகளாக அடிபணிந்து வாழும் இழிவு வாழ்க்கையைவிட இவ்வுலக வாழ்க்கையோ அல்லது உயிர் வாழ்வதோ அத்தாய்க்குப் பெரிதாகத் தெரியவில்லை என்பதாகத்தான் பொருள் கொள்ள முடியும். எனவே, வீர உணர்வும், மான உணர்வும் எதையும் விஞ்சி நிற்கக் கூடிய மன உரத்தைச் சங்கத் தமிழர் பெற்றிருந்தனர் என்பது பெறப்படும். நாட்டை இழந்து, குலம் தழைப்பதில் எந்த ஒரு பெருமையும் கிடையாது. மாறாக அது குலத்திற்கு முடிவில்லாக் குற்றத்தைச் சேர்த்துவிடும். மானம் இழந்து வாழ்வது வாழ்வே ஆகாது. மாறாக, மூன்று மாபெரும் வீரர்களை நாட்டுக்குக் கொடுத்த அந்தத் தமிழ்த் தாயின் கொடைதான் தமிழர்தம் வீரத்தின் அடையாளம்.

மேலும், இவ்வாறு போர்க்களத்தில் வீரமரணம் எய்திய தம் புதல்வர்களைக் கண்ட மறக்குல மகளிர், ‘இன்ன விறலும் உலகுள் கொல் நமக்கு? என மூதிற் பெண்டிர் கசிந்து அழ, நாணி, கூற்றுக் கண்ணோடிய பெருவரு பறந்தலை...’ (புறம் 19) எனப் பாடுவதாக அமைகிறது. இவ்விதம் தம் மக்களின் வீரமரணத்தை வெற்றியாக ஏற்று நெகிழ்ந்து அழுத தாய்மார்களின் முன் கூற்றுவன் நாணமுற்றான் எனும் கருத்து காட்டப்படுகின்றது. ஒரு உயிரைப் பறிக்கும் போது, அது கூற்றுவனுக்கு வெற்றியாகிறது. ஆனால் உலக மக்களுக்கோ அது துயராகின்றது. ஆனால் இவ்விடத்தில் தம் மக்களின் உயிர் போர்க்களத்தில் பறிக்கப்பட்டது கண்டு வீரத்தாய்மார்கள் துயரம் கொள்ளாமல் மகிழ்வது கண்டு இத்தகைய வீரர்களின் உயிரைப் பறித்துச் செல்வது தமக்கு அழகல்ல என நினைத்து எமன் நாணுவதாகக் கூறப்படுகின்றது. இதன்வழி வீரத்தாய்மார்களின் நெஞ்சுரமும் வீரப் பண்பும் நன்கு வெளிப்படுகின்றது. வீரத்தையே மானமாய்க் கருதிய பழந்தமிழர்தம் பண்பாடு போற்றுதலுக்குரியதாகும்.

இப்பண்பாட்டைப் பற்றிய பல செய்திகள் புறநானூற்றில் விரவி இருப்பதைக் காணமுடிகின்றது. மானமிழந்த மன்னனும் வீரர்களும் கற்பிழந்த பெண்களைப் போல மான உணர்வுக்கு ஆட்பட்டுத் தங்களை மாய்த்துக் கொள்ளும் செய்திகளும் புறநானூற்றில் காணக்கிடக்கின்றன. சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கண்ணனோடு போரில் தோற்று, குடவாயில் கோட்டத்தில் சிறைபட்டான். தண்ணீர்த் தாகத்தால் சிறைக் காவலரிடம் தண்ணீர் கேட்டான். ஆனால் காவலர்கள் காலதாமதமாக நீர் கொண்டு வந்ததால், மான உணர்வுக்கு ஆட்பட்ட சேர மன்னன் தம்மைச் சிறைப்படுத்தியதை, நாயினைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டதோடு ஒப்பிட்டுப் பசித் தீயினைத் தணிக்க வேண்டி, இரந்திடும் இழிந்த நிலை தமக்கு ஏற்பட்டதை எண்ணிக் காவலன் கொண்டு வந்த நீரை ஏற்காது அவமானத்தினால் கூனிக்குறுகி தன் உள்ளக் கிடக்கையை ஒரு பாட்டாக எழுதி வைத்துவிட்டு மானம் காக்க உயிர்த் துறந்தான் இரும்பொறை (புறம் 74). இப்பாடலின் வழி, மானத்துக்கு மேலான அறமும், பொருளும், இன்பமும் இல்லை என்று வலியுறுத்தும் பழந்தமிழரின் பாங்கை உணர்தல் வேண்டும்.

புறநானூற்றின் 66ஆவது பாடலில் சேரமான் பெருஞ்சேரலாதன், சோழன் கரிகாலனோடு போரில் ஈடுபட்டான். அப்போரில் தோல்வி கண்டு முதுகிலே புண்பட்டதற்கு வெட்கப்பட்டு எதுவும் உண்ணாமல் சேரமான் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர்த் துறந்தான். இப்பாடலைப் பாடிய புலவர் வெண்ணிக்குயத்தியார் (பெண்பாற்புலவர்), இது சேர மன்னனுக்குத்தான் புகழ் என்பதாகக் கூறும் வண்ணம் இவ்வாறு உயிர்த் துறந்த செய்கையானது சோழன் கரிகாலன் கண்ட வெற்றியைக் காட்டிலும் புகழ் உடையது எனும் பொருள்படும்படி ‘நின்னிலும் நல்லன் அன்றோ’ எனக் கூறினார். இவ்விடம் மான உணர்வானது அனைத்து அறங்களுக்கும் மேலானது என்னும் தமிழரின் சிந்தனை மறுபடியும் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

மரபை மீறித் தன் பிள்ளைகளே தன் மீது போர் தொடுக்க நேரிட்ட நிலையைப் பொறுத்துக்கொள்ள இயலாத கோப்பெருஞ்சோழன் பட்டினிக் கிடந்து, வடக்கிருந்து உயிர்த் துறந்தான் (புறம் 213–221). தம் மீது படையெடுத்துவந்த புதல்வர்களை வெல்லும் ஆற்றலைக் கொண்டிருந்தான் கோப்பெருஞ்சோழன். ஆயினும் புல்லாற்றூர் எயிற்றியனார் சொன்ன அறவுரைகள் அவனுக்கு மன உணர்வை ஏற்படுத்திற்று. மங்காத புகழை நிலைநிறுத்தி மறைந்தாலும், அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கப்போவது அவனது புதல்வர்கள் தானே. அவர்களைப் போரில் வீழ்த்திவிட்டால், சேர்த்த புகழாலும், செல்வத்தாலும் என்ன பயன் உள்ளது? ஒருவேளை உன் புத்திரர்கள் உன்னைத் தோற்கடித்துவிட்டால், அது உனக்குப் பெரும் பழியை அல்லவா சேர்த்துவிடும் என்ற அறவுரை கேட்டுத் தம் புதல்வர்களை வெல்வதும், அவர்களால் வெல்லப்படுவதும் தனக்கு இழுக்கு என்பதை உணர்ந்த மன்னன் கோப்பெருஞ்சோழன் பட்டினிக் கிடந்து, வடக்கிருந்து உயிர்த் துறந்தான்.

தமிழரின் வீரத்தையும் போர்ச் சூழலையும் குறிப்பிடும்போது புறநானூறு ஒரு சில காட்சிகளை முன்வைக்கின்றது. அவ்வகையில் வெற்றி பெற்ற மன்னனின் வீரத்தைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறுவது (புறம் 11), மன்னன் போரிலே வெற்றி பெற்றுத் திரும்பும்போது அம்மன்னவனின் தேரின் முன்னும் பின்னும் ஆடல் மகளின் வெற்றிக் களி நடனம் ஆடி மன்னனை மகிழ்விப்பது போன்ற குறிப்புகள் வருகின்றன. இது அம்மன்னவனின் வெற்றியைப் புகழ் பாடும் விதமாக நடைபெறும் காட்சியாகும். இதுபோலவே மன்னன் போருக்குப் புறப்படும் போதும் வாழ்த்துப் பாக்களைப் பாடி, மன்னருக்கும் வீரர்களுக்கும் எழுச்சி தருவதும் உள்ளது. போரிலே வெற்றி கொண்டு வீடு திரும்பிய வீரர்களை அவர்தம் மனைவியர் அரவணைத்து அவர்களின் உடலில் உள்ள போர்க் காயங்களை வருடித் தந்து ஆற்றுவது, போரில் வீரமரணம் அடைந்த தங்கள் கணவன்மார்களின் சிதையில் தீப்பாய்ந்து உயிர்விடுவது அல்லது போரில் மரணமுற்ற தம் கணவனின் வீரத்தை எண்ணி ஆனந்தக்

கண்ணீர் சிந்துவது போன்ற காட்சிகளும் காட்டப்படுகின்றன. இதில் முக்கியமானது வீரர்களை நடுகல் தெய்வமாகப் போற்றித் துதிப்பது ஆகும்.

பழந்தமிழர் மரபில் மானம் காக்கப் போரில் வீரமரணமுற்ற வீரருக்கும் அவருடன் தீப்பாய்ந்த மனைவிக்கும் நடுகல் வைத்து அவர்களைத் தெய்வமாய்ப் போற்றி விழா எடுத்து வீர வணக்கம் செலுத்தும் வழக்கமும் உள்ளது (புறம் 221, 223 - 265). சில சூழலில் கைமை நோன்பிருக்கின்ற அரசர் தம் துணைவியரின் பொலிவிழந்த நிலையைக் கண்டு புலவர்கள் இரங்கிப் பாடிய பாடல்கள்கூட புறநானூற்றில் காணக்கிடக்கின்றன (புறம் 261, ஆவூர் மூலங்கிழார்). இவ்வாறு போரில் வீரமரணமுறுகின்ற வீரர்களுக்குக் கள் படைத்தல், பலியிட்டுப் பூசைகள் செய்தல் போன்றவையும் அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் வழக்கமும் இருந்திருக்கின்றது. இவ்வாறு ஓர் ஊரில் செய்யப்படும் நடுகல் பூசையானது அவ்வூருக்கே சிறப்புச் சேர்ப்பதாக அமைந்துள்ளதாக மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் பாடிய பாடல் குறிப்பிடுகின்றது (புறம் 329).

நன்முல்லையார்பாடியபுறநானூற்றின்306ஆவதுபாடல் நடுகல் வழிபாட்டில் பழந்தமிழருக்கு இருந்த ஆழ்ந்த நம்பிக்கையைப் புலப்படுத்துவதாக உள்ளது. இப்பாடலில், மறக்குலப் பெண்ணொருத்தி தன்னுடைய குலத்தில் நாட்டின் மானம் காப்பதற்காக வீரமணம் எய்தி நடுகற்களாக நிற்கின்ற முன்னோர்களை எல்லாம் வேண்டி வணங்கி, அவர்களைப் போலவே நாட்டின் மானத்தைக் காக்கப் போருக்குச் சென்றிருக்கின்ற தன் கணவன் பகையை வென்று விரைவாக வீடு திரும்ப அருள்தர வேண்டும் என்று வேண்டுகின்ற நிலையைக் காண்கிறோம். இதன்மூலம் இவ்வாறு நடுகல்லாக வணங்கப்படுகின்ற இவர்களுடைய முன்னோர்களின் ஆன்மாக்கள் இவர்களுக்கு அருள் செய்வதான நம்பிக்கை பழந்தமிழரிடையே இருந்துள்ளது அறியப்படுகின்றது.

இதுவல்லாது மானத்திற் சிறந்த ஒப்பற்ற வீரர்களின் நடுகற்கள் இருக்கின்ற ஊரில் வாழ்வதுவே ஒரு வீரனுக்கும், மக்களுக்கும் பெருமை என்கின்ற கருத்திலும் ஐயூர் முடவனார் பாடிய பாடல் புறநானூற்றின் 314ஆவது பாடலாக அமைகின்றது. வீரம் விளைந்த மண் என்பார்களே! அதன் அடையாளமாக நடுகற்களைக் கண்டு மதித்துப் பூசித்துப் பாராட்டி வாழ்கின்ற பழந்தமிழரின் மான உணர்வினையும், வீர வேட்கையையும் இப்பாடலின் வழி உய்த்துணர முடிகின்றது.

ஒரு குடும்பத்தின் நல்வாழ்விற்கு அன்பும் காதலும் அடிப்படையாக அமைவதுபோல நாட்டின் நலத்திற்கும் பலத்திற்கும் ஆண்மையும் வீரமும் அடிப்படையாக அமைவதாகச் சொல்லலாம். இவ்வாறு போர் புரிதலும், போரில் வெற்றி அடைதலும் அல்லது போரின் வழி வீர மரணம் அடைதலும் தமிழரின் மானம் காக்கும் மாண்பாகக் கொள்ளப்பட்ட போதிலும் அத்தகைய போரிலும் அறநெறியை வலியுறுத்தியிருந்தமை தமிழரின் மேன்மையையும் அறம் போற்றும் தன்மையையும் காட்டுவதாக அமைகின்றது (சாமி சிதம்பரனார், 1986, 225). பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பகையரசனுடன் போர் தொடங்கும் முன்னர் கொல்லுதல் கூடாத தன்மையுடைய பசுக்களையும், அத்தகைய பசுவினது குணங்களைத் தன்னகத்தே கொண்ட அந்தணர்களையும், பெண்களையும், நோயுற்றவர்களையும், தாம் இறந்த பின்னர் தமக்கு இறுதிக் கடன்களைச் செய்வதற்குப் பிள்ளைகளைப் பெறும் பேறு அற்ற தம்பதிகளையும் நோக்கித் தாம் போர் தொடங்க விருப்பதால், அதற்கு முன்னர் அவர்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ளும் பொருட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு பணிக்கின்றார் என்பதாக நெட்டிமையார் (புறம் 9) பாடுகின்றார்.

பொதுவில் பசுக்குலத்தை இறைக்கு ஒப்பாகவும், தாய்மையின் சின்னமாகவும், வழிபடுவதற்குரிய உயிராகவும் போற்றுதல் தமிழர் மரபு. அதுபோலவே மறையோதும் அந்தணர் போற்றுதலுக்குரியவராகவும் வணங்கத்தக்கவராகவும் தமிழர் பண்பாட்டில்

போற்றப்பட்டுள்ளனர். இது தவிர்த்துப் பெண்கள், நோயுற்றோர், பிள்ளைப் பேறு அற்றவர் போன்றோரும் ஒரு ஆண்மகனால் பாதுகாக்கப்பட வேண்டியவரே அல்லாமல் கொல்லப்பட வேண்டியவர் அல்லர் (சாமி சிதம்பரனார், 1986, 225). இந்த அறநெறியைத் தமிழர் தமது வாழ்வில் கடைபிடித்தனர் என்பதுவும், தம் மக்கள் மட்டுமின்றி, பகை மன்னரின் மக்களாக இத்தகையோர் இருந்தபோது, அவர்களும் பாதுகாக்கத் தக்கவரே எனும் கருத்தை முன்வைப்பதாக இப்பாடல் அமைகிறது.

பொதுவில், சங்க இலக்கியங்கள் காட்டும் போர்கள் யாவும் மானம் காக்கும் போராகவே இருந்துள்ளன. சங்க காலத்தில் மும்முடி வேந்தர்களாக விளங்கிய சேர, சோழ, பாண்டியர் ஒருவரோடு ஒருவர் போர் செய்து வந்தனர் என்பது தெரிகிறது. எனவே பல நூற்றுக்கணக்கான போர்களைத் தமிழினர் சந்தித்திருக்க வேண்டும். இதுவல்லாது மும்முடி மன்னரைச் சார்ந்து வாழ்ந்த சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும்கூட மும்முடி வேந்தரோடு இணைந்தும், தனித்தும் பலப் போர்களைச் செய்தனர் என்ற செய்திகளையும் புறநானூற்றுப் பாடல்களில் காணமுடிகின்றது (ஞானசம்பந்தன், 1955, 38-40). இச்சூழலில் மும்முடி வேந்தரும் சிற்றரசர்களும் எக்காலத்தும் போர் நிலவும் சூழலிலேயே வாழ்ந்து வந்தமையால் போர் என்பது இவர்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகவே அமைந்திருந்ததைக் காணமுடிகின்றது. நாட்டின் தேவைகளும் ஆட்சியும்கூட போருக்கும் வீரத்திற்கும் முதன்மை தருகின்ற நிலையிலேயே இருந்ததைப் புறநானூற்றுப் பாடல்களின் வழி உய்த்துணர முடிகின்றது.

சங்கத் தமிழரின் போரில் மும்மன்னருள் தாமே மன்னர்க்கு மன்னராக வேண்டும் என்ற உயரிய நோக்கமே போருக்குக் காரணமாக இருந்திருப்பது தெரிகிறது. இதுகுறித்துப் புறநானூற்றின் 8ஆம் பாடல் இவ்வுலகம் தனக்கும் பிற மன்னர்களுக்கும் பொது என்ற கருத்தைச் சற்றும் பொறுக்காமல் அதனைத் தனக்கு மட்டுமே ஆக்கிக்கொள்ள வேண்டும் எனும் பெருவேட்கையால் அனைத்து இன்பங்களையும் துறந்து போரை மேற்கொண்டான் சேரலாதன் எனும் கருத்தைக் கபிலர் வெளிப்படுத்துகின்றார்.

சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும்கூட தங்கள் மானம் காக்கும் நிலையிலேயே போர்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு பல மன்னர்களும் போர் புரிந்த போதிலும் இவர்களுள் இமயவரம்பன், செங்குட்டுவன், நெடுஞ்செழியன், கரிகாலன் போன்றோரே தனித்த தன்மையோடு மன்னருக்கு மன்னராகும் நிலையை எய்தினர் என்பதும் தெரிகிறது. தனித்து அனைவரையும் தன் ஆட்சியின்கீழ் கொண்டுவரும் மனப்பான்மை உடையவர்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள். அரசனாகப் பிறந்ததே போர் செய்து புகழ் பெறுவதற்குத்தான் எனும் எண்ணம் அவர்களிடம் மிகுந்திருந்தது. இத்தகைய எண்ணமானது ஓர் உயர்ந்த இலட்சியம் என்று கொள்வதற்கில்லை. ஆனாலும்கூட அக்காலத்து கிரேக்க மக்களைப் போலவே தமிழ் மன்னர்களும் இதனைத் தங்களின் நாகரிகத்தின் அடையாளமாகக் கருதினர் எனக் கூறுவது பொருந்தும்.

மன்னர்க்கு மன்னராகும் பெருமித நோக்கம் அந்நாளில் மானம் காக்கும் போர்கள் நிகழ்வதற்கு அடிப்படையாக அமைந்தன எனலாம். மேற்குறிப்பிட்ட சில அரசர்கள் வல்லரசர்களாக மன்னர்க்கு மன்னராக விளங்கும் பொருட்டு பிற அரசர்களையும் குறுநில மன்னர்களையும், சிற்றரசர்களையும் வெற்றி கொண்டனர். இவ்வாறு வல்லரசருக்கு அடிபணிந்து வாழும் நிலை எய்திய அரசர் பலரும் அவரவர்க்குரிய உரிமையை மீண்டும் பெறுவதற்காக மானம் காக்கும் போரில் காலம் பார்த்து இறங்கினர் என்பதும் தெரிய வருகிறது.

அஃதன்றித் தம்மை இகழ்ந்து பேசிய மன்னருக்குத் தன் வீரத்தைக் காட்டும் பொருட்டு மான உணர்ச்சி மிகுதியால் கூட மானம் காக்கும் போர் நிகழ்ந்திருக்கின்றன. சிறு வயதில் அரசுபொறுப்பேற்ற பாண்டியன் நெடுஞ்செழியனைச் சிறுவனென்றும், இளைத்தவன் என்றும்

எண்ணம் கொண்ட அரசர்களை மான உணர்வால் வஞ்சினம் கூறி தலையாலங்கானத்தில் பெரும் போர் புரிந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். இப்போரும் கூட மானம் காக்கும் போராகத்தான் அமைந்தது (புறம் 72). இதுபோலவே சோழன் நலங்கிள்ளியும் தம்மை இகழ்ந்துரைத்த மன்னனுடன் மானம் காக்கப் போரிட்டான் என்பதுவும் அறியப்படுகின்றது (புறம் 73).

இதுதவிர, 'மகட்பாற் காஞ்சி' எனும் துறைக்குரிய 20 பாடல்கள் (புறம் 336-354, 356) காணக்கிடக்கின்றன. மகட்பாற் காஞ்சி என்பது பிறரிடம் இருக்கின்ற சிறந்த மகளிரைத் தனக்கு மணம் செய்து கொடுக்க மறுக்கும் மன்னர்களை வற்புறுத்தல் வேண்டி மேற்கொள்ளப்படும் போர்களாகும். மேலும் பொறாமை, கோபம், தீராப் பகையின் காரணமாகவும் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவ்விடம் முடியுடை வேந்தர் மூவரின் தாக்குதலையும் மானம் காத்தற் பொருட்டு எதிர்கொண்ட பறம்புமலைக் கோட்டையின் மன்னன் பாரிவள்ளலின் மானம் காக்கும் போரினைச் சுட்டலாம். ஆயினும், இவ்வாறு நடத்தப்பட்ட போர்களை உயர்வானதொரு போராக, வீரமாகத் தமிழர் மரபு போற்றவில்லை. மாறாக, இத்தகையப் போர்களை நிகழ்த்திய அரசர்கள் தமிழரின் உயர்தனிப் பண்பாட்டுக்கு ஊறுவிளைத்தவர்களாகவே கருதப்பட்டனர். தமிழர்தம் பண்பாட்டு வரலாற்றில் கறைபடிந்த சில குறிப்புகளுக்கு இம்மன்னர்களும் ஆளாகினர்.

இதுகுறித்துப் பரணர் பாடிய புறநானூற்றின் 336ஆவது பாடல் பெண்ணைக் கொடுக்காததால் போர் செய்யத் துணிந்தவனின் தாய் ஒழுக்கமற்றவளாகத்தான் இருந்திருப்பாள் எனச் சொல்லப்படும் செய்தியை 'தகைவளர்த்து எடுத்த நகையொடு, பகைவளர்த்து இருந்தஇப் பண்புஇல் தாயே' என வரும் வரிகளால் அறியலாம். இவ்வாறு பெண்ணுக்காகப் போர் தொடுக்கும் நிலையானது அந்த ஊரின் பொலிவையெல்லாம் கெடுத்துவிடும் எனும் செய்தியைப் பரணர் பாடிய புறநானூற்றின் 341ஆவது பாடலில் காணலாம். இதுபோன்ற இழிவான போரில் கூட நூற்றுக்கணக்கானோர் உயிர் துறந்த செய்தியைப் பாடல் 342 சுட்டுகின்றது. 345ஆவது புறப்பாடலில், பெண் காரணமாக நடைபெற்ற தொடர் போர்களைப் பற்றிய செய்திகளைக் காணமுடிகின்றது.

இவ்வாறு பெண்ணுக்காகப் போர் செய்து பல ஆண்மக்கள் இறந்துபட அந்த ஊரில் நாட்டைக் காக்கும் பணிக்குக்கூட போதுமான வீரர்கள் கிடைக்கமாட்டார்கள். அதனால் அந்த ஊரும் அழிந்துபோகுமோ, மக்களிடையே அமைதியும் சுபீட்சமும்கூட இல்லாமல் போய்விடுமோ என மக்களின் கலக்கத்தை அண்டர் மகன் குறுவழுதி (புறம் 346), கபிலர் (புறம் 347), மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தார் ஆயத்தனார் (புறம் 350), மதுரைப் படைமங்க மன்னியார் (புறம் 351) பாடிய பாடலிலும் வெளிப்படும் செய்திகள் இவ்விடம் கவனிக்கத்தக்கன. இப்படி பெண் கேட்டு வற்புறுத்திப் போர் புரிந்த மன்னன் ஒருவன் தன் மார்புகளில் விழுப்புண் பெற்றான்; புறமுதுகிட்டு ஓடினான் எனும் செய்தியைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் தமது பாடலில் (புறம் 353) விவரிக்கின்றார். மானம் காக்கும் போரில் ஏற்படும் விழுப்புண்ணால் பெருமை கொள்ளும் அரசர்களுள் பெண் வற்புறுத்தலால் விழுப்புண் கொண்டான் இவன் எனும் நிலை எத்தகைய இழிவுக்கு உரியது.

இதுபோலவே, போரில் வென்ற பகைவர் நாட்டையும் அரணையும் அழித்து, பகைவர் நாசம் செய்துள்ளனர் எனும் செய்தியும் புறநானூற்றில் காணக்கிடக்கின்றன. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் இயல்புகளை நெட்டிமையார் பாடுமிடத்து, இவ்வரசனால் வெல்லப்பட்ட வேற்றரசர்களின் ஊரை அவன் கழுதை பூட்டி உழுது பாழ் செய்தான் என்றும், விளை வயல்களிலே குதிரைகளைச் செலுத்தி அவற்றையும் அழித்தான் என்றும், யானைகளைக் கொண்டு நல்ல நீர் நிலைகளைக் கலக்கி நாசம் செய்தான் என்றும் பெருவழுதியை வியப்பது போலப் பாடுகின்றார் (புறம் 15).

பிறிதொரு பாடலில் பாண்டரங்கண்ணனார் சோழன் பெருநற்கிள்ளி தாம் வென்ற பகையரசனின் நாட்டில் பகைவர்தம் விளைந்த வயலைக் கொள்ளையிட்டான்; வீடுகளை இடித்துத் தள்ளி அவ்வீடுகளுக்குத் தீ மூட்டினான்; மக்களின் தேவைக்காகப் பாதுகாக்கப்பட்ட நீர்நிலைகளை யானைகளைக் கொண்டு நாசம் செய்தான்; அந்த ஊர் எரியூட்டப்பட்டதால் சூரியனின் சிவந்த கதிர் போல எரியும்படிச் செய்தான் எனும் நாச வேலைகளைக் குறிப்பிடுகின்றார் (புறம் 16). 'ஊர் சுடு விளக்கம்' எனப்படும் இந்நாசச் செயல் புறப்பாடல் 7-லிலும்கூட காணமுடிகின்றது. பகை நாட்டின் அழிவிற்கு இரக்கமுற்றுப் பாடிய பாடலாக இப்பாடல் அமைகின்றது. இதே செய்தி புறநானூற்றின் 392ஆவது பாடலிலும் காணப்படுகின்றது.

இதன்வழி போர் செய்தல் என்பது அரசர்க்குப் பெருமையாயினும், அவற்றிலும் அறம் மறந்த இதுபோன்ற காரியங்கள் நடந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை. இக்காலப் போர் முறைகளிலும் கூட பகை நாட்டின் அடிப்படை வசதிகளை (பாலம், சாலை, தொலைத்தொடர்பு வசதிகள், துறைமுகம், விமான நிலையம் போன்ற இன்ன பிற) அழித்து அவர்கள் தற்காப்புச் செயல்களில் ஈடுபட முடியாமல் முடக்கும் உத்தியைக் கையாண்டு கொண்டுதான் இருக்கின்றனர். இருப்பினும் இவ்வநீதியைக் கொண்டு சங்கத் தமிழ் அரசர்களின் அறம் மறந்த செயல்களை நியாயப்படுத்துவது போற்றுதலுக்குரியதாகாது.

## முடிவுரை

பொதுவில் தமிழரின் வீரம் மிக்க போர்கள் யாவுமே மானம் காக்கும் போர்களாக இருந்துள்ளதை அறியப்படுகின்றது. மானத்தைக் காப்பதன் பொருட்டு இன்னுயிரைத் தியாகம் செய்த பழந்தமிழரின் செம்மாந்த பண்பாடு போற்றுதலுக்குரியதாகவே விளங்கியுள்ளது. போரினால் பல நாசங்கள் நிகழ்ந்து மக்கள் அல்லலுக்குள்ளாகினர் என்ற போதிலும் மானமிழந்து பகையரசனுக்கு அடிபணிந்து வாழ்வதைக் காட்டிலும் நாட்டுக்காகத் தம் சந்ததியையே தியாகம் செய்யக் கூடிய தமிழரின் வீரம் நிலைநிறுத்தப்படுகின்றது.

இந்த மானம் காக்கும் வீரமானது ஆண்மக்களிடம் மட்டுமின்றி, தமிழ்க் குலப் பெண்களிடத்தும் காணப்படுவது சிறப்பானதாக விளங்குகின்றது. ஆண்மக்களைப் பெறுவதே நாட்டின் மானம் காப்பதற்காகத்தான் எனும் பழந்தமிழரின் நாட்டுப்பற்று அவர்களின் ஒப்புயர்வற்ற வாழ்க்கைப் பண்பாட்டிற்கு மகுடம் சூட்டுகின்றது. மான உணர்வும், நாட்டுப் பற்றும், தமது குலத்தைக் காப்பதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யக்கூடிய மன உறுதியும் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய நெறிகள் என்று ஏற்பதே சிறப்பு.

## Bibliography


Balasubramanian, S. (1994). Tami; Ilakkiya Varalâ_u. Chennai: Chennai: Pari Nilayam.

Nyanasambanthan. A,. Sa. (1995). Akamum Pu_amum. Chennai: Pari Nilayam.

Pu_anâIû_u.

Rajantheran, M&Silllalee, K.(2014). "Uyarattil Nâkarîkam-Pa77attil Camutâyam" in S.Sathasivam, M.Rajantheran, Nya.Sujatha, K.Pupathi & L.Thangaraj (Eds), Tami;ilakkiya Vakaimaika7um Vâ;viyal CintaIaika7um. (pp.364-374). Chennai: Semmuthai Publication.

Samy Sithambaranar. (1986). Pa;antami;ar Vâ;vum Va7arcciyum. Chennai: Ainthinai Publication.

Suburedyar, N. (1981). AkattiGaik Ko7kai. Chennai: Pari Nilayam.

Tamilannal. (1992). Putiyanôkkil Tami; Ilakkiya Varalâ_u. Madurai: Sinthamani Publication.

Varatharasan, Mu., Va. (1992). Tami; Ilakkiya Varalâ_u. New Delhi: Sahitya Academy.